25 325

roved by the Text-Boo Committee, Madras,
Vide Page 363, of the Fort. St. George Gazette, Part I B. Dated 27-5-1919

SONGS AND STORIES.

Correlated and in popular style
Suited for School Children's use

Part I.

கதையும் பாட்டும்.

(முதற் பாகம்)

BY

V. MUTHUSWAMI AYYAR, M. A., L. T.,
Deputy Inspector of Schools, Tiruvalur Range and Member, Literary Board, Madura Tamil Sangam

AND

A. K. SUBRAHMANYA AYYAR,
Headmaster, Hindu Nadar Kshatriya Vidyasala, Tiruchuli;
Formerly, Tamil Pandit, S. B. K. High School, Aruppukottai.

ELEVENTH EDITION

E. M. GOPALAKRISHNA KONE,
MADURA & MADRAS.

1933. [*Price 3 As.*

er Press, Madura.

OCT 1933 MADR.
CH. 03',1 N33·1 120904

Some Select Opinions.

M.R.Ry. Rao Bahadur C. Nagoji Rao Avl., B. A., F.M.U. Retd. Inspector of Schools and a great educationist:- "Your *Songs and Stories* are in easy Tamil and little children would like them".

(2) **M.R.Ry. Natesa Ayyar Avl., M.A., L.T., I. E. S.,** District Educational Officer (Inspector of Schools), Tinnevelly:—"The *Songs and Stories* are an *excellent* instrument **in the** hands of the Elementary teacher to diffuse brightness and cheer among the children in his charge. The metre is *flowing* and *exhilarating* and the tunes are quite familiar to the Tamil land and much loved and enjoyed by all, old and young on account of their association with great master pieces of devotional literature. The language, I need hardlymention, is both *choice and simple* and worthy of your deep culture in Tamil and your Educational experience. The book can be **made** the centre and starting point of much *intelligent and fruitful kindergarten work.* Those engaged in Elementary Education should, I consider, feel **thankful to** the authors for *the valuable guidance and inspiration* provided for them in this book."

(3) **M. S. H. Thompson, Esq., B. A., A. C. R.,** (London) **I.E.S.,** Inspector of European & Training Schools:-

"It was certainly worth publishing, as to me, the song seems to possess much literary merit on, of course, their own plane I have had occasion to read a good manv சிந்தனை and the like meant for the people, but in almost every case I hava missed *that easy flow of verse and lucidity of expression* which mark your compositions. Elementary school masters will, I am sure, be glad to have your collection of songs which **are** bound to become popular very soon."

(4) **M.R.Ry. T. S. Krishnamoorti Ayyar Avl., B.A., L. T., I.E.S.,** Inspector of Schools, Cuddalore:—

"The book appears to be written on *right* lines. The language is *simple.* I hope your book will be *appreciated* by a large number of Elementary School teachers."

கதையும் பாட்டும்

(முதற்பாகம்)

பாலபோதன முறைக்கேற்ப ஸுலபமாக
அமைக்கப்பட்டன.

OFFICE OF THE REGISTRAR OF CO...
17 OCT 1933
MADRAS

இராமநாதபுரம் ஜில்லா கேர்ல்ஸ் ரேஞ்சு ஸப் அஸிஸ்
டெண்ட் இன்ஸ்பெக்டரும், மதுரைத் தமிழ்ச்சங்கம்
வித்தியாலோசனைசபை மெம்பரும் ஆகிய

வே. முத்துசாமி ஐயர் எம். ஏ., எல். டி.,

திருச்சுழி ஹிந்து நாடார் க்ஷத்திரிய வித்யாசாலைத்
தலைமை ஆசிரியர்

ஏ. கே ஸுப்ரமண்ய ஐயர்

இவர்கள் இயற்றியன.

பனிரண்டாம் பதிப்பு.

மதுரை புத்தக வியாபாரம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வெளியிட்டது.

ரிஜிஸ்தர் செய்தது] 1933. [விலை அணு 3.

-600 008
170904

முன்னுரை

இச்சிறு நூல் பல பதிப்புகள் அடைந்திருக்கிறதை நோக்க, உபாத்திம நேயர்கள் நூலாசிரியர்களை உற்சாகப்படுத்தும் படியான காரியத்தை அன்புடன் செய்திருக்கிறார்களென்பது தெற்றெனவிளங்குகிறது. சம்பாஷணை ரூபமாயுள்ளவை, இன்னும் அதிகமாகச் சேர்க்கப் படவேண்டுமென்ற, பல உபாத்தியாயர்கள் விருப்பிற்கிணங்க, அம்மாதிரியான இரண்டு கதைகளும் அவைகள் சம்பந்தமாய்த் தற்காலத்தில் வழங்கி வரும் நூதனமெட்டுகளில் பாட்டுகளும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆகையால், இன்னும் வேண்டிய உதவி புரியுமாறு உபாத்திம நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றனம்.

இங்ஙனம்,

நூலாசிரியர்கள்.

3166
894.843

உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

சிறுவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்க வேண்டிய பாடங்களில் தேசபாஷை கட்டாயப்பாடத்தில் முதலாவதாகும். தேசபாஷையையும் புதுமுறைப்படி சரியாகப் போதிப்பதற்குக் 'கதையும் பாட்டும்' சிறந்த வழிகளாகும். இவ்விரண்டுபாடத்திலும் பிள்ளைகளோடு பற்பல விஷயங்களைப்பற்றி வாய்மொழியாக உபாத்தியாயர் அடிக்கடி பேசுவதாலும், பிள்ளைகளைத் தம் சொந்த வார்த்தையிலே விஷயங்களை வெளியிடும்படி தூண்டுவதாலும், பிள்ளைகளுக்குத் தேசபாஷையில் தேர்ச்சியுண்டாகுமன்றோ?

மேலும் இவ்விரண்டு பாடங்களையும் போதிப்பதால், சிறுவர்களுக்கு இயல்பாகவேயுள்ள (புது விஷயங்களை உணர்வதில்) ஆவலும், உத்ஸாகமும் அதிகப்படுமென்பது எல்லா உபாத்தியாயர்களுக்கும் தெரிந்தவிஷயம். இதனால் தான் பாட்டு ஒரு முக்கிய பாடமாயிருக்கிறது. இவ்வாறு சிறுவர்களுக்கு மிகவும் தகுதியுள்ள பாடங்களான கதை, பாட்டு இவை தனிவிஷயங்களாயிராமல் ஒரேவிஷயத்தைப் பற்றி இச்சிறு நூலில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்படி இருந்தால் சொல்லப்படும் விஷயங்கள் பாலர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதியும். இப்படிப் போதிப்பதே தொடர்முறை போதனையாகும். உபாத்தியாயர்கள் இதில் கூறியுள்ள ஒவ்வொரு கதையையும், பாட்டையும் ஆதாரமாகக்கொண்டு, இயலும்வரை மற்றபாடங்களை ஏற்றபடி இதனோடு சம்பந்தப்படுத்திப் போதிக்கமுயல்வது மிகவும் பொருத்தமுடையதாகும். உதாரணமாகக் கதையும் பாட்டும் ஆனபிறகு வாசகத்திற்கு அந்தக் கதையையே நடத்தலாம். மிகச்சிறியவர்களுக்குக் கதையிலுள்ள முக்கியாம்சங்களை வகுப்புக்குத்தக்கபடி கறுப்புப்பலகையில் உபாத்தியாயர்கள் எழுதி, வாசகம் கற்பிக்கலாம். கதை நடித்தல்,

சம்பாஷணை, விளையாட்டு, பார்த்தெழுதல் இவைசுலபமாய் இப்பாடங்களோடு சம்பந்தப்படும். சித்திரம், கிண்டர் கார்ட்டன், கைத்தொழில் இவற்றிற்கும் வகுப்புக்குத் தகுந்த பாடம் குறித்த கதையிலுள்ள விஷயத்திலாவது அதற்குக் கொஞ்சம் சம்பந்தப்பட்டவைகளிலாவது உற்று நோக்கின் அகப்படாமல்போகாது. பொது விஷயம் இயற்கைப் பாடம் இவைகளையும் கற்பிக்க இக்கதைகள் பெரும்பாலும் இடந்தரும். இப்படி ஸ்வாபமாய்த் தொடர்புறுகின்ற பாடங்களைப்பற்றிப் புஸ்தகத்தின் முடிவில் அநுபந்தத்தில் சில குறிப்புகள் காட்டப்பட்டிருக்கின்றன. அவை போன்ற பிறவற்றை உபாத்தியாயர்கள் தாமே யோசனை செய்து ஏற்படுத்திக்கொள்ளலாம். இப்படி ஊக்கத்துடன் உபாத்தியாயர்கள் போதித்தால் ஒரு கதையும், பாட்டும் மற்ற சம்பந்தப்பட்ட பாடங்களும் ஏறக்குறைய ஒரு வாரத்துக்குமேல் போதியனவா யிருக்குமென்பது எமது கருத்து. ஆனல் தொடர்முறை போதனையில் ஒரு விஷயம் உபாத்தியாயர்கள் நன்ருய்க் கவனிக்கவேண்டும்.

அது யாதெனில், போதிக்கும் புதுப்பாடம் எடுத்துக்கொண்ட விஷயத்தோடு இயல்பாகவும், எளிதாகவும் இயைபுள்ளதாகவும் இருக்கவேண்டும். அப்படி அது அமையாவிட்டால் வேண்டுமென்று, "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டதுபோல்" ஏதாவது ஒரு தொடர்பை நாமே வலிய ஏற்படுத்தக்கூடாது. பூகோளம், கணிதம், தேகாப்பியாசம் இப்பாடங்களுக்கும் கதை, பாட்டு இவற்றிற்கும் பெரும்பாலும் ஸம்பந்தம் சுலபமாய் ஏற்படாத பட்சத்தில் தொடர்முறை போதனை இவற்றிலும் தொடரவேண்டுமென்பது அவசியமில்லை.

இப்புத்தகத்திலுள்ள கதைகளையும், பாட்டுக்களையும், போதிக்கும் உபாத்தியாயர்கள் தம்ஊரின் நிலைமை, பிள்ளைகளின் ஸாமர்த்தியம் இவற்றை உத்தேசித்து வகுப்புக்குத்

தக்கபடி போதிக்கவேண்டுமென்பது எமது விருப்பமாத லால்,இன்னகதை இன்னவகுப்புக்கு என்னும்வரையறை செய்யவில்லை. ஆயினும் சில சௌகரியம் கருதி இப்பதிப்பை இரண்டுபாகமாக வெளியிடுகிறோம், முதற்பாகம் 1-முதல் 3-வகுப்புகளுக்கும் இரண்டாம்பாகம் 3-முதல் 5-வகுப்புகளுக்கும் உபயோகமாகு மென்பது எமது கருத்து. இச்சிறுநூலை ஒருவழியாகக்கொண்டு ஸங்கீத ஞானமுள்ள உபாத்தியாயர்கள் தாமே தம்வகுப்புக்குரிய வேறு கதைகளுக்குத் தக்க பாட்டுக்களையும் அமைத்துக் கொள்ளலாம். வாசகத்துக்கு உதவியாகவே கதைகள் இங்கே எழுதப்பட்டிருக்கின்றன. இக்கதைகளை ஒரு சிறிதும் பிள்ளைகள் மனப்பாடம் பண்ணுதபடி உபாத்தியாயர்கள் கவனிப்பதுடன், பாட்டில் எங்காவது கடினபதங்கள் இருப்பினும் அவற்றைச்சிறுவர்களுக்கு நன்ருய் விளக்கும்படி உபாத்திம நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதன் நான்காம் பதிப்பில் புதிய கதைகளும் பாட்டுக்களும் அதிகம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சம்பாஷணை ரூபமாயுள்ளவை மிகவும் உபயோகமா யிருக்குமென்று கருதிப் பல உபாத்தியாயர்களுடைய விருப்பிற்கிணங்க அப்படிப்பட்டவைகளும் தக்கபடி இதிற் சேர்த்திருக்கிறோம்.

இதிலுள்ள குற்றங் குறைகளைக் கவனித்துப் பரிகரிப்பில் அதனுல் இப்புஸ்தகத்திற்கும், அதன்மூலம் பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கும் நன்மை விளையுமாதலால், அப்படியே செய்தருள வேண்டுமென்று இச் சிறுநூலைப் படிக்கும் பெரியோர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

நூலாசிரியர்கள்.

விஷய விவரம்

விஷயம்.			பக்கம்.
முகவுரை			3-5
சிறுவர்களுக்கு அர்ப்பித்தல்			7
கடவுள் வணக்கம்	....	....	8
ராஜ வாழ்த்து	....	....	9
நாயின் நல்லறிவு	....	....	11
புத்தியுள்ள சிறுவன்	....	....	12
ஓநாயும், ஆட்டுக்குட்டியும்	....	....	14
நோய்கொண்ட கலைமான்	....	—	15
நான்கு எருதுகளும், சிங்கமும்	....	....	17
தாயும், இரண்டுபிள்ளைகளும்	....	....	18
காக்கையும், குடமும்	....	....	22
குதிரையும், நரியும்	....	....	23
எலியும், தவளையும்	....	....	26
பொன்வாத்தும், பேராசைக்காரனும்		....	27
சிங்கமும், சுண்டெலியும்	....	....	30
சிறுவனும், நல்லபாம்பும்	....	....	33
இரண்டு திருட்டுப்பிள்ளைகள்	....	....	34
கவன மில்லாத பையன்	....	....	37
ஆமையும், முயலும்	....	....	38
நன்றியில்லாத மான்	....	....	41
எஜமானனை ஏய்க்கப்பார்த்த கழுதை		....	42
தகப்பனும், உண்மையுள்ள பையனும்		....	44
அற்ப சாகவாசம் பிராண சங்கடம்	....	....	46
துஷ்டர் தன்மை	....	....	49
அனுபந்தம்	....	....	51

கதையும் பாட்டும்

சிறுவர்களுக்கு அர்ப்பித்தல்.

"தலையே நீவணங்காய்" என்ற மெட்டு.

1. சிறுவர்க் கர்ப்பிக் கிறோம்—சிறு
பாட்டொடு சேர்கதைகள்
சிறுவர் கள்படித் தின்பம் சிறக்கவே
சிறுவர்க் கர்ப்பிக் கிறோம்.

2. பிள்ளைகட் கர்ப்பிக் கிறோம்—பெரும்
அன்பு பெருகி இந்நூல்;
பிள்ளை கள்பல நற்குணம் பெற்றிடப்
பிள்ளைகட் கர்ப்பிக் கிறோம்.

3. கதையும் பாட்டுமிவை—கலந்
தோதிற் கருத்து நன்றாய்ப்
பதியும் என்றெண்ணிப் பாலர்க்கர்ப்பிக்கிறோம்
கதையும் பாட்டும் இவை.

கடவுள் வணக்கம்.

'மந்திர மாவது நீறு' என்ற மெட்டு.

நாடுவோம் ஈசன் பொற் பாதம்;
நன்மை தரும் அந்தப்பாதம்;

தேடுவோம் திவ்ய நற் பாதம்;
சோக்கை தூக்கும் அப் பாதம்;

பாடுவோம் அவர் திருப் பாதம்
பரிந்தருள் பாலிக்கும் பாதம்

கூடுவோம் சிறுவர்கள் கூடிக்
கும்பிடுவோம் மலர்ப் பதமே.

மாத்தாட'பார தேனே என்ற மெட்டு.

தேவா! காத்தருள் புரிவாய்;—சித்தம் மகிழ்ந்து
தேவா! காத்தருள் புரிவாய்.

1. வாவா! சகல லோக மாதாபி தாவாம்உன்னை
நாவாரத்துதிக்கிறோம்; நற்குணம் எமக்கீந்து (தே)

2. நாங்கள் எல் லோரும்வித்தை ஞானம் அடைவதற்கு
பாங்காய்ப் புத்தி கொடுத்துப் பக்ஷமாய் எங்களை (தே)

ராஜ வாழ்த்து.

வாழ்க வாழ்கவே தினம் வாழ்க வாழ்கவே என்ற மெட்டு.

1. மன்னர் ஓங்கவே; ஜார்ஜ் மகிபர் ஓங்கவே;
நன்ன யம்சேர் மேரி ராணி நாளும் ஓங்கவே.

2. கொடியும் ஓங்கவே; ராஜ குடும்பம் ஓங்கவே;
குடிகள் ஓங்க; மன்னவன்செங் கோலும் ஓங்கவே.

3. நேசம் ஓங்கவே; விசு வாசம் ஓங்கவே;
ஈசனருளால் கல்வி செல்வம் எங்கும் ஓங்கவே.

'தந்தந் தந்தந் தனனன' என்ற மெட்டு.

1. எங்கள் செல்வ மகாராசர்
எங்கும் புகழ்மிகு மகாராசர்

2. என்றும் இனிய மகாராசர்
நன்று புரியும் மகாராசர்

3. வித்தை வளர்க்கும் மகாராசர்
பத்தி விளக்கும் மகாராசர்

4. ஓதி யுணர்ந்த மகாராசர்
நீதி யுணர்ந்த மகாராசர்

5. சிங்கக் கொடிசேர் மகாராசர்
சிங்கம் போலும் மகாராசர்

6. ராசாதி ராசர் மகாராசர்
மாசாது சாந்தர் மகாராசர்

7. எந்தை போ லன்பர் மகாராசர்
இந்தியா வந்த மகாராசர்

8. தன்னுயிர் போல மகாராசர்
மன்னுயிர் காக்கும் மகாராசர்

9. பொங்குசீர் ராணியொடும் வாழி
மங்கள மக்க ளொடும் வாழி

10. வாழுக வாழுக, வாழுகவே,
வழிவழி வழிவழி வாழுகவே.

நாயின் நல்லறிவு.

ஒரு வைத்தியர் வெளியே உலாவப் போகையில் வழியில் ஒரு நாய் நொண்டிக்கொண்டு கஷ்டப்படக் கண்டார். கண்டு அதை உற்றுப்பார்த்து, வீட்டுக்குக் கொண்டு போய், அதற்கு மருந்து வைத்துக் கட்டினார். நாயும், சந்தோஷத்துடன் வெளியே போயிற்று. பிறகு கால் முழுதும் ஆறுகிறவரைக்கும் தினந்தினம் வந்து காயங்கட்டிக் கொண்டு போயிற்று.

சில காலம் சென்ற பிறகு அந்த நாய் தன்னுடன் காலொடிந்த மற்றொரு நாயைக் கூட்டிக்கொண்டு வைத்தியர் முன் வந்து வாலையாட்டிக் கெஞ்சி நின்றது. வைத்தியரும் சங்கதி தெரிந்து சந்தோஷத்துடன் அந்தத்தோழ நாய்க்கும் சிகிச்சை செய்து அனுப்பினார். கண்டோ ரெல்லாம் நாயின் நல்லறிவைக் கொண்டாடினார்கள்.

பாட்டு.

"பொன்னார் மேனியனே" என்ற மெட்டு.

1. ஒருநாள் ஒருவைத்தியர்—ஒரு
வழியிடைச் செல்லுகையில்
ஒருகால் நொண்டிக்கொண்டு—ஒரு
நாயங்கு போகக்கண்டார்.

2. நொண்டிக்காலைப்பார்த்து—அவர்
நொடியில்தன் வீட்டினுக்கு
கொண்டுபோய் அந்நாயை—அதன்
காலுக்கு மருந்துகட்டி

3. வெளியே அனுப்ப அது—விசு
வாசமாய் வாலாட்டி
வெளியே அகன்று தினம்—மிக
ஒழுங்காக வேவந்து

4. காலே யாற்றிக்கொண்டு—களிப்
பாகவே போன தன்பின்
பலநாள் செல்லுகையில்—அது
மற்ருெரு நொண்டிநாயை

5. கூட்டியே அங்குவந்து—குறிப்
பாகவால் குழைத்திடலும்
நாட்டமாய் வைத்தியரும்—அந்த
நாயுடன் கூட வந்த

6. தோழநாய்க் கும்காலே—சுகம்
செய்தனர் அந்நாயின்
ஆழமான அறிவை—அனே
வோர்களும் மெச்சிக்கொண்டார்.

புத்தியுள்ள சிறுவன்.

ஒரு நாள் ஒரு கடையில் ஒரு சிறுவன் சாமான் வாங்கினுன். கடைக்காரச் செட்டி சிறு பையனே ஏய்க்க எண்ணிப் படியைக் குறைச்சலாய் அளந்தான். பையன் அதைக்கண்டு, ஏன் குறைவாய் அளக்கிறீர் என்றதற்குச் செட்டி, 'பையா! உனக்குத் தூக்கப் பாரம் குறைவாயிருந் தால் நல்லதுதானே?' என்ருன். பையனும் சாமானேப் பெற்றுக்கொண்டு, பணத்தைக் குறைத்துக் கொடுத்தான்.

அதற்குச் செட்டி 'ஏன் பணம் குறைகிறது?' என்றான். பையனும் 'உமக்கு எண்ண லேசாய் இருக்குமன்றோ?' என்று பதில் கூறிவிட்டுப் போனான். மோசஞ்செய்வது மிகவும் அவமானமானது.

பாட்டு.

"தலையே நீவணங்காய்" என்ற மெட்டு.

சிறுவன்:— 1. ஐயா செட்டியாரே!—அள
வேனோ குறைக்கின் றீர்?
மெய்யா உள்ள படியே அளந்திடும்.
ஐயா செட்டியாரே!

செட்டி:— 2. பையா! நல்லதுதான்—பளுக்
கொஞ்சம் குறையும் அன்றோ?
கையால் நீஇதை எளிதில் சுமக்கலாம்
பையா நல்லதுதான்.

(பையன் பணங்கொடுக்க, செட்டி எண்ணிப்பார்த்து)

செட்டி:— 3. சிறுவா?இது என்னடா!—சில
காசு குறைகின்றதே;
அறியா யோகணக்குச்சரி யாகவே?
சிறுவா!இது என்னடா!

சிறுவன்:— 4. அறிந்தே தான் கொடுத்தேன்:—ஐயா
நான் அந்தப் பணம்
குறைந்தால் அதைஎண்ண உமக்கெளி தாமென
அறிந்தே தான் கொடுத்தேன்.

ஓநாயும், ஆட்டுக்குட்டியும்.

ஒரு ஆற்றில் ஒரு ஓநாயும், ஆட்டுக்குட்டியும் தண்ணீர் குடித்துக்கொண் டிருந்தன. அப்போது ஓநாய் ஆட்டைப்பார்த்து "ஏ, குறும்புத்தன முள்ள ஆடே! ஏன் நான் குடிக்கும் தண்ணீரைக் கலக்கிச் சேருக்கிருய்?" என்று அதட்டிக்கேட்டது. அதற்கு ஆடு மிகவும் பயந்து, "ஐயா ஓநாயாரே! தண்ணீர் தங்க ளிடமிருந்தே எனக்கு வருகிறது" என்று பணிவாகச் சொல்லிற்று. அப்போது ஓநாய், "அது இருக்கட்டும்; நீ என்னை ஆறுமாதகாலமாக வைதுவருவதாகக் கேள்விப் பட்டேன். அதென்ன உனக்கு அத்தனை போக்கிரித் தனம்! அற்ப ஆட்டுக்குட்டியே" என்று அதிக கோபத் துடன் கேட்டது. இதைக்கேட்ட ஆடு நடுநடுங்கி, "ஐயா! நான் பிறந்தே இன்னும் ஆறுமாதம் ஆகவில்லையே! தங் களுக்கு எந்தப்பாவி இப்படி அனியாயமாகக் கோள் சொல்லிக் குறும்பு செய்தானே! நான் ஒரு பாவமும் அறி யேன்" என்று தீனஸ்வரத்துடன் பதில் சொல்லிற்று. அதுகேட்டு அந்தக் கொடிய ஓநாய் "நீ வைதிரா விட்டா லும் உன் அப்பன், பாட்டன், யாராவது வைதே இருப் பார்கள். அதற்காக உன்னை நான் தண்டிக்கவேண்டும்" என்று சொல்லி, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அதைக் கடித்துக் கொன்றது. துஷ்டர்கள் அருகில் போனாலும் துன்பம் உண்டாகும்.

பாட்டு.

"அம்பலத்தரசே" என்ற மெட்டு.

ஓநாய்:— 1. "யாரடா இங்கே முன்னின்றே
ஆற்றில் நானும் குடிக்கின்ற
நீரிதைச் சேரு கக் கலக்கும்
நெஞ்சுத்துணிவுகொண்டபயல்?"

ஆடு:— 2. "ஐயா அடியேன் குடிக்குந் தண்ணீர்
அவ்விட மிருந்தே வருகிறதே;
ஐயா இதுவே பள்ளமாகும்;
அதுவே மேடென் றறிவீரே"

ஓநாய்:— 3. "அதுபோ கட்டும் குறும்பாடே!
ஆறு மாத காலமாக
எதுகா ரணமாய் அடாநீயும்
என்னை வைது வருகின்றாய்?"

ஆடு:— 4. "பொய்யாய் யார் கோள் சொன்னாரோ?
பூமியில் சிறியேன் பிறந்தின்னும்
ஐயா! துரையே! ஆறு மாதம்
ஆக வில்லை இது மெய்யே"

ஓநாய்:— 5. "என்னடா மெத்தப் பேசுகிறாய்; நீ
இல்லா விட்டால் உங்களப்பன்
என்னைத் திட்டி யேயிருப்பான்;
இதற்குப் பழியுன்னை வாங்கிடுவேன்"

6. என்றே கொடிய ஓநாயந்த
எளிய ஆட்டைக் கொன்றதனால்,
என்றும் துஷ்டர் கள்பக்கம்
எகுதல் தீங்காய் முடிந்திடுமே.

நோய்கொண்ட கலைமான்.

பல கலைமான்கள் ஒரு காட்டில் வசித்து வந்தன. அவற்றுள், ஒன்றுக்கு வியாதிவந்தது. ஆனால் வியாதிவருவதற்கு முன்னேயே அது தன்னிடத்தில் அதிகமாக அதற்குப் போதுமான ஆகாரம் தேடி வைத்திருந்தது.

இப்படி இருக்கையில் அந்த நோயாளியாகிய மானை மற்ற மான்கள் பார்க்க வந்தன. வந்தவைகள் அங்கே இருந்த தீனியை யெல்லாம் வயிறு நிரம்பத்தின்றுவிட்டு, தம் இடத்துக்குத் திரும்பிப்போயின. நோயுள்ள மானுக்குக் கொஞ்சம்கூட இரை மிச்சமில்லை. பாவம்! அதற்கு இரை தேடவும் சக்தியில்லை. நோயினாலும், பசியினாலும் வருந்தி அது சீக்கிரம் செத்துப்போயிற்று.

நமக்கு வேண்டியவர் போலக் காண்பவர் எல்லாரையும் 'நல்லவர்' என்று நாம் நினைக்கக் கூடாது. அவர்களில் சிலர் நமக்குத் தீங்கு செய்பவராகவும் இருக்கலாம்.

பாட்டு.

கும்மி மெட்டு.

1. காட்டில் கலைமான்கள் வாசஞ்செய்துகொண்டு
களிப்புடன் கூடி இருக்கையிலே,
ஒன்றுநோய் கொண்டு சக்தி யற்றே
ஓரிடத்திலே இருந்ததுவே.

2. ஆனால் அதுநன்றாய் இருக்கும்கா லத்தில்
ஆகாரம் சேர்த்து வைத்ததுவே;
அப்போதந் நோயுள்ள மானைப் பார்க்க
அநேக மான்கள் வந்தனவே.

3. வந்தமான் களெல்லாம் இருந்த இரையை
வயிறு நிரம்பத் தின்றுவிட்டு
வந்தவழியே நடந்து சொல்லாமலே
மகிழ்ந்து தம்மிடம் போயினவே.

4. ஆகார மில்லாமல் நோய்கொண்ட மானின்
ஆவிபிரிந்து போனதையோ!
இவ்வுல கில்நமக் குற்றவர் கள்என்று
எல்லோரையும் எண்ண லாகாதே.

நான்கு எருதுகளும், சிங்கமும்.

நான்கு காளைமாடுகள் ஒரு காட்டில் ஒன்று சேர்ந்து வாழ்ந்துவந்தன. அவைகள் அங்கு உள்ள புல்லை நன்றாய் மேய்ந்து கொழுத்திருந்தன. அவைகள் ஒவ்வொன்றும் அதிகபலமுள்ளது. இவ்வளவு பலமுள்ள எருதுகள் எப்போதும் சேர்ந்தே இருந்தபடியால் சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்கள் ஏதாவது அவற்றை எதிர்த்தால் அவை நான்கும் ஒன்று சேர்ந்து கொண்டு, நாலுபக்கத்திலுமாகக் கொம்பினால் இடித்துக்குத்தி அந்த மிருகத்தைக் கொன்று விடும்; அல்லது துரத்திவிடும்.

இவைகளை "என்றைக்காவது அடித்துத் தின்ன வேண்டும்" என்று ஒரு சிங்கம் வெகுநாளாய்க் காத்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் ஏதோ ஒரு காரணத்தினால் எருதுகள் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டு, கலைந்து மூலைக்கொன்றாய் மேய்ந்துகொண் டிருந்தன. "இதுதான் ஸமயம்" என்று சிங்கம் அவற்றைஒவ்வொன்றையும் தனித்தனி எதிர்த்துக் கொன்று தின்றது.

எப்போதும் இனத்தாரோடு ஒன்று சேர்ந்து வாழ்பவர்க்குப் பலம் அதிகம். அவர்களுக்குப் பகைவராலாவது வேறு எவ்வகையினாலாவது தீங்கு வாராது.

பாட்டு.

நொண்டிச்சிந்து.

அருமைச் சிறுவர்களே—நீங்கள்
அறியவோர் கதையைப் புகலுகின்றேன்;
அன்புடனே கேட்பீர்—ஒருபெரும்
காட்டிலே நான்கு எருதுகள் தாம்

களிப்புடன் வாழ்ந்துவர—அப்போது
அவைகளைக் கொன்று தின்பதற்கு

அடுத்தது ஒரு சிங்கம்;—ஆனால்
எருதுகள் ஒன்றுகூடி இருந்ததினால்

எண்ணம் பலிக்கவில்லை—ஒருநாள்
எருதுகளெல்லாம் சண்டையிட்டு

இருந்தன தனித்தனியாய்—இந்த
ஸங்கதியைச் சிங்கம் அறிந்துகொண்டு

சடுதியில் அங்கே வந்து—ஒவ்வொன்றாய்க்
கொன்று தின்றதவ் எருதுகளை

கூறிய இக்கதையால்—ஒற்றுமையாய்
வாழ்தலே பலம் என்ற படிப்பினையை

மறவாமல் மனத்தில் வைப்போம்.

தாயும், இரண்டு பிள்ளைகளும்.

ஒரு ஸ்திரீ, ஷண்முகம், சங்கரன் என்னும் தன்னுடைய இரண்டு பிள்ளைகளுடன் ஒரு ஊரில், வாழ்ந்து வந்தாள். அந்தப் பிள்ளைகள் ஒரு நாள் வீட்டினுள்ளே பந்தாடினார்கள். அப்போது பந்து கண்ணாடி விளக்கிற் பட்டதினால் விளக்கு உடைந்து போயிற்று.

உடனே ஷண்முகம், "சங்கரா! நாம் இதைத் தாயாரிடம் சொல்லுவோம்" என்றான். சங்கரன் "நாம் ஏன் சொல்லவேண்டும்? அது தானாகவே உடைந்தது என்று அம்மாள் எண்ணிக்கொள்ளட்டும்" என்றான். ஷண்முகம் மறுபடியும் "நாம் உடைத்துவிட்டு, அதைச் சொல்லாம

விருப்பது பிசகு. நம் தாயார் நாம் எப்போதும் நிசமே பேசவேண்டும் என்று சொல்லி இருக்கிருர்களே! உனக்கு ஞாபகம் இல்லையா?'' என்றான். அதற்குச் சங்கரன் "நீ வேண்டுமானல் அம்மாளிடம் போய்ச்சொல்லு; நான் வர மாட்டேன்; என்னைக் கேட்டால், எனக்குத் தெரியா தென்று சொல்லி விடுகிறேன்'' என்றான்.

இப்படி இவர்கள் பேசியதை அடுத்த அறையிலிருந்த தாயார் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் பிள்ளைகளிடம் வந்து "சங்கரா! நீ வெகு கெட்டபையன்; உன்னை எல்லோரும் வெறுக்கிருர்கள். நீ பொய் பேசிய தால் என் கண்முன் நில்லாதே ஓடிப்போ'' என்று கோபித்துச் சொன்னாள். பிறகு ஷண்முகத்தைப் பார்த்து, "ஷண்முகம், நீ நல்லபையன்; உன்னை எல்லோரும் மெச்சு கிருர்கள்; எனக்கு ஒரு முத்தங்கொடு; உண்மை பேசின உனக்குத் தின்பண்டங்கள் தருகிறேன்'' என்று பிரிய மாய்ப் பேசினாள். சங்கரனுக்கு அப்போது மிகுந்த வெட்க முண்டாய் நல்ல புத்தி வந்தது. உடனே அவன் தாயாரை வணங்கி, "இந்தத் தடவை மாத்திரம் என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் நான் ஒருபோதும் பொய் பேசவில்லை'' என்றான். அப்படியே அவள் அவனை மன்னிக்க, அவனும் நல்ல பையனானன்.

உண்மையினால் எப்போதும் உயர்வே உண்டாகும். பொய்யினால் எப்போதும்; பொல்லாங்கே விளையும்.

பாட்டு.

"பூமி மெச்சிடும்" என்ற காவடிச்சிந்து மெட்டு.

ஷண்முகம்.

நோரகநாம்ஓடிச் சீராகத்தாயிடம் கூறுவோம்—செய்தி
கூறுவோம்—செய்தி கூறுவோம்.
நேர்ந்ததே இவ்விதம் நேரில்நன்ருகவே என்செய்வோம்—
ஐயோ என்செய்வோம்.

சங்கரன்.

வேண்டாமடாதம்பி! ஏண்டாநீசொல்லவே போகிருய்—
அடே போகிருய்—அடே போகிருய்.
விளக்கு உடைந்தாலும் நமக்கு என்னபயம் கூறுவாய்—
தம்பி கூறுவாய்.

ஷண்முகம்.

தப்பிதமல்லவோ தாயார்முன்சொன்னதை நோக்குவாய்,
நன்ருய் நோக்குவாய்—நன்ருய் நோக்குவாய்.
தவருமல்இப்போதே மறவாமல் தாயிடம்சொல்லுவோம்—
இதைச் சொல்லுவோம்.

சங்கரன்.

இஷ்டமில்லைஎனக்குக் கஷ்டம்வந்தாலுந்தான் வரட்டும்—
தம்பி வரட்டும்—தம்பி வரட்டும்.
இஷ்டம்போல்தாயிடம் நஷ்டம்வராமல்நீசொல்லிக்கொள்—
தம்பி சொல்லிக்கொள்

தாயார்.

"ஸ்ரீராமச்சந்திரனே" என்ற மெட்டு.

"சங்கரா! உன் துர்க்குணத்தால்.
சகலரும் வெறுப்புண்டார்கள்;
சடுதியில்இவ் விடத்தைவிட்டுச் செல், செல், செல்.
உன்முகத்தில் விழித்தாலும் பாவமாம்" (சங்)

"ஷண்முகம்! உன்சற்குணத்தைச்
சகலரும் மெச்சினூர்கள்;
தவருமல் முத்தம்தர வா, வா, வா.
இந்தாவாங்கிக்கொள் தின்பண்டங்கள்" (ஷ)

சங்கரன்.

"இத்தடவை; என்குற்றத்தைப்
பொறுத்தருள வேணுமம்மா;
இனியிவ்விதம் செய்வதில்லை நான், நான், நான்.
ஏழைமேல்கொஞ்சம் இரக்கம்வை" (இத்)

தாயர்

பொய்யனுமெந் நாளாகிலும்
புத்திகெட் டகப்படுவான்;
மெய்யையே பேசவேண்டும் நாம், நாம், நாம்.
மேன்மைக் கேற்றவன் மெய்யனே. (பொ)

காக்கையும், குடமும்.

ஒரு காட்டில் ஒரு காக்கைக்கு அதிக தாகமுண்டாயிற்று. வெகுதூரம் பறந்து அலைந்து பார்த்தும் தண்ணீர் காணப்படவில்லை. தாகந்தான் அதிகரித்தது.

பிறகு ஓரிடத்தில் ஒரு குடத்தைக்கண்டு, ஆவலுடன் அங்கே பறந்துபோய் அதனுள்ளே பார்த்தது. தண்ணீர் குடத்தின் அடியில் கொஞ்சம் இருந்தது. காக்கையின் மூக்குக்கு அது எட்டவில்லை. அப்போது காக்கை ஒரு யோசனைசெய்து, சிறுகற்களை மூக்கால் பொறுக்கிக் குடத்திற்குள் போட்டுக்கொண்டே வந்தது. கற்களை உள்ளே போடப்போட, தண்ணீர் மேலே எழுந்து வந்தது. குடத்தின் கழுத்தண்டை தண்ணீர் வந்தபோது காகம் அதை ஆவலோடு குடித்துத் தன் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு, வெகு சந்தோஷமாய்ப் பறந்து போயிற்று.

நம்முடைய காரியம் கஷ்டமுடையதாகத் தோன்றினாலும் புத்தியினால் யோசித்து, நாம் அதைச்செய்ய முயல வேண்டும்.

பாட்டு

‘ ஆரிமோரிப் பியாரி’’ என்ற இந்துஸ்தான் மெட்டு.

1. காக்கையொன்று அதிக தாகத்தால் வருந்தியதால்
கண்ட இடமெல்லாம்ஓடி—காக்கை

2. குடம்ஒன்றைக்கண்டு அங்கே குறிப்பாய்ச்சென்று
குனிந்துஉள்ளே பார்த்தது—காக்கை

3. கொஞ்சமாகத் தண்ணீர் குடத்தில் இருந்ததினால் குடிக்க முடியவில்லை—காக்கை

4. நிலத்திலுள்ள கல்லை எடுத்துள்ளே போட்டதினால் நீர்மேல் வரக்கண்டது—காக்கை

5. ஜலத்தினைக்குடித்துத் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு ஸந்தோஷ மாய்ப்பறந்தது—காக்கை

6. ஆகையால் நமக்கொன்ருகாதுபோல் தோன்றினும் ஆலோசனைவேண்டும்—காக்கைபோல்

குதிரையும், நரியும்.

ஒரு ஊரில் ஒரு குடியானவன் குதிரையொன்று வைத்திருந்தான். அது அவனுக்கு நெடுநாளாய் ஸவாரி செய்யவும், வண்டி இழுக்கவும் உபயோகப்பட்டது. பிறகு அது கிழக் குதிரையானபோது அதனால் முன்போல் வேலைசெய்ய முடியவில்லை.

அப்போது அந்தக் குடியானவன் குதிரையைப் பார்த்து "இனி உன்னால் எனக்குப் பிரயோசனம் இல்லை: ஆதலால் உன்னை நான் வளர்க்கமாட்டேன்; நீ வெளியே ஓடிப்போ" என்று கூறினன். குதிரை பிழைக்க வழிதெரியாமல் மனங்கலங்கி நிற்பதைப்பார்த்து, யஜமானன், "நீ ஒரு சிங்கத்தைப் பிடித்து இங்கு கொண்டுவந்தால் உன்னை நான் எந்நாளும் பாதுகாப்பேன்" என்ருன்.

இது முடியாத காரியம் என்று குதிரை ஏக்கமுற்று வெளியில்போய் நிற்கையில், அங்கே ஒரு நரி வந்து, குதிரை

யின் ஸங்கதியெல்லாம் கேட்டு அறிந்துகொண்டு, "குதிரையே! நீ அஞ்சாதே. என்சொற்படி நடந்தால் சிங்கத்தைப் பிடித்துத்தருவேன்" என்றது. குதிரையும் அப்படியே 'சரி' என்று ஒப்புக்கொண்டது.

பிறகு நரி அதைச் செத்ததுபோல் படுக்கவைத்து, ஒரு சிங்கத்தின் குகையருகிற் போய், அங்குள்ள சிங்கத்தைப் பார்த்து "மிருகராஜா! ஸமீபத்தில் கொழுத்த பெரிய குதிரையொன்று அடிபட்டுக்கிடக்கிறது. அதைக் காத்துக் கொண்டிருக்கும்படி இன்னொருசிங்கம் என்னிடம் சொல்லிவிட்டுக் காட்டுக்குள் போயிருக்கிறது. அந்தக்குதிரையை உங்களுக்கு ஆகாரமாக்க வேண்டுமென்று இஷ்டப்பட்டு இங்கே வந்தேன். நீங்கள் என்னுடன் வந்தால் அந்தக் குதிரையை உங்கள் காலுடன் கட்டிவிடுகிறேன். நீங்கள் இங்கே அதை இழுத்துக்கொண்டுவந்து, நிதானமாய்த் தின்னலாம்" என்றது. சிங்கமும் அதற்கு ஸம்மதித்தது.

பிறகு இரண்டும் குதிரையிருந்த இடத்திற்கு வந்தன. அப்போது நரி சிங்கத்தின் பின்னங்கால்களைக் குதிரையின் சேணத்துடன் கட்டிவிட்டு, குதிரையைத் தட்டி "பிடி ஓட்டம்" என்று கூறிற்று. குதிரையும் தன்னுடைய முழுபலத்தோடும் அதிவேகமாய் ஓடித் தன் யஜமானன் வீடுசேர்ந்தது. குதிரையையும், சிங்கத்தையும் பார்த்து, யஜமான் ஸந்தோஷமடைந்து, சிங்கத்தை ஒரு கூட்டில் அடைத்தும், குதிரையைச் சாகுமளவும் பிரியமாய் வளர்த்தும் வந்தான்.

பாட்டு.

"அம்பலத் தரசே" என்ற மெட்டு.

1. ஒருகுடி யானவன் வளர்த்துவந்தான்
ஒருகுதி ரையை வெகு காலமாக

"வயதாய் விட்ட குதிரையுன்னை
வளர்க்கமாட்டேன்போ வெளியே" என்றான்.

2. குதிரையும் வழிதெரி யாமல்மனம்
குன்றிப்போ யிருப்பதைக் கண்டு அவன்
கொஞ்சம் அதன்மேல் இரக்கம்வைத்துத்
கூப்பிட்டு ஸங்கதி சொல்லலுற்றான்:—

3. "சிங்கம் ஒன்றுநீ கொண்டுவந்தால்
சிரமமில் லாமலே இருந்திடலாம்;
சும்மா திரும்பி வந்தா யானால்
சுருட்டிடுவேன்உன்னைச்சவுக்கினாலே"

300 009 170904

4. என்றுசொல்ல இந்தக் குதிரை மிக
ஏக்கத்துடனே மனங்கலங்கி
என்னசெய் வோமென் றிருக்கையிலே,
எங்கிருந் தோஒரு நரிவந்து,

5. ஸங்கதி முழுவதும் கேட்டறிந்து
சடுதியி லேஒரு யுக்திசொல்லி
செத்த குதிரைபோல் படுக்கவைத்தோர்
சிங்கத்தைக் கூட்டிவந் ததனுடைய

CH 03'1 N33.1

6. கால்களைக் குதிரையின் சேணத்தோடு
கட்டிவிட் டப்புறம் போய்நின்று,
"குதிரையே! எழுந்து போ" வென்று
கூவின உடனே அக்குதிரை

7. தன்னா லானப லத்தோடு
தாவித் தாவி ஓடிப்போய்த்

தன்யஜ மானன் வீடுசேரத்
தட்டிக்கொடுத்தான் ஸந்தோஷமாய்.
'புத்திமான் பலவா னவா' னென்னும்
பொன்போ லிந்தப் பழமொழியைக்
கவனமாய்ச் சிறுவர்கள் நாமெல்லாம்
கற்றுக்கொள் வோமே இக்கதையால்.

எலியும், தவளையும்.

ஒரு ஊரில் ஒரு எலியும், ஒரு தவளையும் புதிதாக ஸ்நேகம் செய்துகொண்டன. ஒரு நாள் எலி தவளையைப் பார்த்து "நண்பனே! நாம் ஒருவரை விட்டொருவர் பிரியாமல் எப்போதும் சேர்ந்தே இருக்கவேண்டும். அதற்காக என்னுடைய வாலையும், உன் காலையும் ஒரு கயிற்றால் கட்டிக்கொள்ளலாம்" என்றது. தவளை ஸந்தோஷமாய் ஸம்மதிக்க இரண்டும் அப்படியே செய்துகொண்டன.

பிறகு சந்தோஷமாய் இரண்டும் சேர்ந்து ஓடி ஆடிக் களித்துத் திரிந்தன. அப்போது அருகே ஒரு குளத்தைக் கண்டதும் தவளை, 'தொப்' என்று அதற்குள் குதித்து நீந்தி விளையாடிற்று. எலி பாவம்! மூச்சுவிட முடியாமல் தண்ணீரில் முழுகி இறந்துபோய்க் கொஞ்ச நேரத்தில் ஜலத்தில் மிதந்தது. அங்கே உயர வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்த ஒரு பருந்து அதைக்கண்டு, சரேலெனப் பாய்ந்து, அந்த எலியைத் தன் கால்களில் இடுக்கிக் கொண்டு, மேலே போயிற்று. அப்போது தவளையும் தலை கீழாகத் தொங்கிக்கொண்டு மேலே போயிற்று. பிறகு எலி தவளை இரண்டும் பருந்திற்கு இரையாயின. சேரக் கூடாதவர் சேர்ந்ததினால் இப்படிக் கஷ்டம் வந்தது.

பாட்டு.

'வாழ்க வாழ்கவே' என்ற மெட்டு.

1. எலியுந் தவளையும்-வெகு-இஷ்டமாய்மனம்
கலந்து வாலுங் கையுங் கயிற்றால் கட்டிக்கொண்டன.

2, கட்டிக் கொண்டபின்-அவை-களித்துத் திரிகையில்
கிட்ட இருந்த குளத்தில் தவளை கிளம்பிக் குதித்ததே;

3. திக்கு முக்கிட்டு-எலி-செத்து மிதந்ததே;
பக்கம் இருந்த பருந்து ஒன்று பாய்ந்தவ் எலியையே

4. தூக்கிச் செல்கையில்-தலை-தொங்குந் தவளையும்
போக்கில் லாமல் பருந்தினாலே புசிக்கப்பட்டதே.

5. யாரு மிதனாலே-மிக-எளிதில் உணரலாம்;
சேர வொண்ணாதவர் சிநேகம் செய்யுந் தீங்கென்றே.

பொன்வாத்தும் பேராசைக்காரனும்.

ஒரு ஊரில் ஒரு மனிதன் ஒரு வாத்தை மிகவும் பிரியத்தோடு வளர்த்து வந்தான். அது தினம் தினம் ஒரு தங்கமுட்டை இடுவது வழக்கம். அந்த முட்டைகளால் அம்மனிதன் நல்ல பணக்காரனானான்.

ஒருநாள் அவன் "இந்த வாத்து தினம் ஒரு முட்டை தானே இடுகிறது. இதன் வயிற்றில் பல முட்டைகள் இருக்கும். அந்த முட்டைகளெல்லாம் எனக்கு ஒரே தடவையில் கிடைத்தால் நான் எவ்வளவு பணக்காரன் ஆய்விடுவேன்" என்று நினைத்து, உடனே உள்ளேசென்று, வாத்தைப் பிடித்து, அதன் வயிற்றைக் கத்தியால் கிழித்துப் பார்த்தான். வயிற்றில் சதையும், ரத்தமுந்தான் இருந்தன. தங்க முட்டை ஒன்றுகூட இல்லை. வாத்தும் உடனே இறந்து போயிற்று. அப்போது அம்மனிதன் "தினம் ஒவ்வொன்ருகவாவது தங்கமுட்டை கிடைத்து வந்ததே. இப்போது என் பேராசையால் உள்ளதும் போயிற்றே" என்று அழுது மிகவும் வருத்தப்பட்டான்.

அதிக ஆசை அதிக நஷ்டத்தைத் தருமாதலால் ஒருவரும் பேராசைப்படலாகாது.

பாட்டு.

"என்சாவல் போனவிடம்" என்ற மெட்டு.

1. ஒருஊரில் ஒருமனிதன்
ஒருவாத்தை வளர்த்தான்;
ஒருமுட்டை தினமதிடும்
உயர்ந்த தங்கமுட்டை;

2. அவன்செல்வம் அதினுலே
அதிகரித்து வந்தும்,
அவன்திருப்தி அடையாமல்
ஆலோசனை செய்தான்:—

3. "ஒவ்வொருநா ளுங்காத்து
ஒருமுட்டையே பெறுவேன்.
இவ்விதங்காத் திருக்குமென்னை
ஏய்க்கின்றதிவ் வாத்து;

4. "இதன்வயிற்றில் உள்ளமுட்டை
எல்லாம்கிடைத் திட்டால்
அதன்பின்பணக் காரர்களில்
நான்முதல்வன் ஆவேன்;

5. "ஆஹா! இதை இத்தனைநாள்
அறியவில்லை அதிர்ஷ்ட
யோகம்நமக் கின்றைக்கென்றே
யோசனைசெய் துடனே

6. வீட்டினுள்ளே புகுந்துவாத்தை
வேகமாகப் பிடித்து,
தீட்டிக்கத்தி யால்வயிற்றைத்
திறந்துபார்த்தான் பாவம்!

7. சதையிரத்தம் இவையன்றித்
தங்கமுட்டை யொன்றும்
அதன்வயிற்றில் காணவில்லை;
"ஐயையோ! இன்றென்

8. "ஆசையாலே அறிவழிந்தென்
அருமையான வாத்தை
வீசநாழி யினிற்கொன்றேன்
வெறும்மூடன் நானே.

9. "இருந்தபடி யேஇருந்தால்
என்றுந்தங்க முட்டை
வருந்தாதொவ் வொன்றுபெற்று
வாழ்ந்திருப்பேன் நன்ருய்"

10. என்று அவன் மிகஅழுதான்
இளைஞர்கள்நாம் இதனுல்
நன்றுணர்வோம் பேராசை
நஷ்டந்தரும் என்றே.

சிங்கமும், சுண்டெலியும்.

ஒரு காட்டில் சிங்கமொன்று தூங்கிக்கொண்டிருந்தது. அங்கே ஓடியாடித்திரிந்த ஒரு எலி தெரியாமல்சிங்கத்தின்மேலே விழுந்தோடிற்று. அதனுல் சிங்கத்தின் தூக்கம்

கலையவே, கோபத்துடன் எலியைப்பிடித்து, 'ஏ எலிப் பயலே! மிருகராஜாவான நம்முடைய தூக்கத்தை நீ ஏன் கெடுத்தாய்?' என்று அதட்டிக்கேட்டது. எலி நடுநடுங்கி, 'மகாராஜா! சிறியேன் தெரியாமல் இப்பிழை செய்துவிட்டேன். பொறுத்தருளவேண்டும்' என்று சிங்கத்தின்காலில் விழுந்து பணிந்து கெஞ்சிக்கேட்டுக்கொண்டது. அதற்குச் சிங்கம் 'ஸரி உன்னை இப்போது மன்னித்தேன். இனிமேல் ஜாக்ரதையாகப்பிழை; போ' என்று சொல்லிற்று. எலி வெகு ஸந்தோஷத்துடன் இன்று நாம்'செத்தோம் பிழைத்தோம்' என்றெண்ணிக்கொண்டு, தன் வளைக்குத் திரும்பி ஓடிப்போயிற்று.

கொஞ்சநாளைக்குப் பிறகு ஒருவேடன் அந்தக் காட்டில் ஓரிடத்தில் தன்வலையைக் கட்டியிருந்தான். இந்தச்சிங்கம் தவறிப்போய் அதில் சிக்கிக்கொண்டது. அதற்கு வெளியேவர முடியாததால் 'ஹா' என்று பெரிய கர்ஜனை செய்தது. எலி இதைக்கேட்டு, அங்கேவந்து தனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த உபகாரிக்கு ஆபத்து வந்திருக்கிறதைக்கண்டு, உடனே வலையைத் தன் பல்லால் 'வெடுக் வெடுக்' என்று கடித்தெறிந்தது. சிங்கம் கயிறுகளை உதறிக்கொண்டு வெளியேவந்து, 'நீ சிறு பிராணியா யிருந்தாலும் எனக்குப் பெரிய உதவிசெய்தாய்' என்று எலியைப் புகழ்ந்துவிட்டுத் தன்னிடத்திற்குப் போய்ச்சேர்ந்தது.

உருவத்தில் சிலர் சிறியவர்களாக இருந்தால் அதற்காக நாம் அவர்களைக் குறைவாக எண்ணக்கூடாது. அவர்களும் ஸாமர்த்தியசாலிகளாக இருக்கலாம்.

பாட்டு.

"சுத்தப் பிர்ம்ம பராத்பரராம்" என்ற மெட்டு.

1. காட்டில் ஒரு சிங்கம் தூங்கிடவே
காணுமல் மேல்எலி ஓடிடவே
விழித்துக்கொண் டதைச்சிங்கம் பிடித்திடவே
வீர்வீர் ரென்றெலி கத்திடவே,

2. "தூக்கத்தை ஏன் நீ கெடுத்தாய்" யென்று
துரிதமாய்ச் சிங்கம் கேட்டிடவே
"குற்றத்தைப் பொறுத்திடும், ஐயாவே
கும்பிட்டேன் காலில்" என்றதுவே.

3. சிங்கம் அதன்பின்பு யோசித்து,
"சிறுவனே! மன்னித்தேன்" என்றுசொல்லத்
தப்பினேம் பிழைத்தோம் என்ருேடித்
தங்கின தெலியும் தன்வளையில்.

4. வேடன் ஒருநாள் வலை வீச
வேகமாய் அதில்சிங்கம் வீழ்ந்துபெருஞ்
சத்தம் செய்ததை எலிகேட்டுச்
சட்டென் றந்த இடம் வந்து,

5. விரைவில் வலையைக் கடித் தெறிந்து,
வெளியே சிங்கத்தைப் போகவிட்டு
விடையைத் தானும் பெற்றுக் கொண்டு
வேகமாய் வளைக்கு மீண்டதுவே.

6. உருவில் சிறியவ ரிடத்திலுமே
உபகாரம் நன்ருய்க் கிடைக்குமென்று
உணர்ந்து கொண்டோம்நாம் எல்லோரும்
உண்மையாய் இந்தக் கதையினுலே.

சிறுவனும், நல்லபாம்பும்.

ஒரு சிறுவன் ஒரு நல்லபாம்புக் குட்டியைப்பிடித்து, அதற்குத் தினம் கிண்ணத்தில் பால்வார்த்து, அதைப் பிரியமாய் வளர்த்து வந்தான். அது கொஞ்சம் பெரிதானவுடன் ஒருநாள் அந்தப் பையனையே படமெடுத்துக்கொண்டு சீறிக் கடிக்கவந்தது. சிறுவன் அலறி அழுதுகொண்டு ஓடினான். உடனே பக்கத்திலுள்ளவர்கள் தடியை எடுத்துக்கொண்டு, அந்தப் பாம்பை வெகுதூரத்தில் துரத்திவிட்டார்கள்.

சுபாபத்திலேயே கெட்டவர்களுக்கு நாம் ஏதாவது உதவி செய்தாலும், அவர்கள் தங்களுடைய துர்க்குணத்தையே காட்டுவார்கள்.

பாட்டு.

"பாராயோ என்னைமுகம்" என்ற மெட்டு.

1. ஒருநாளொரு சிறுவன்
ஒருநாகக் குட்டிதனைப்
பார்த்துப் பிடித்ததற்குப்
பால்வார்த்து வளர்த்துவந்தான்.

2. அப்படியே வளர்த்துவர
அதுமிகவும் பெரிதாக,
பால்வார்த்த பாலனையே
படம்எடுத்துக் கடிக்கவர,

3. அப்போது பையன் கண்டு
அலறிக்கொண்டு ஓடிவர
கூச்சலைக் கேட்டு அங்கே
கூடினார்கள் பலபேர்கள்.

4. நாகத்தைக் கொல் கொல் என்று
நல்லதடி ஓங்கிக்கொண்டு
விரைவாக அந்தப்பாம்பை
வெருட்டித் துரத்தினார்கள்.

5. 'துஷ்டர்களைக் கண்டவுடன்
தூர விலகு' என்னும்
நயமுள்ள பழமொழியை
நாமெல்லாம் உணர்ந்து கொள்வோம்.

இரண்டு திருட்டுப் பிள்ளைகள்.

ஒரு ஊரில் சில பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போனார்கள். வழியில் ஒரு மாமரத்தில் பழம் பழுத்துக் கைக்கு எட்டும்படியாகத் தாழ்ந்திருந்தது.

அதைக்கண்ட முனியன், சொக்கன் என்னும் இரண்டு பையன்கள் மற்றவர்களைப்பார்த்து "நேசர்களே! இந்தப் பழங்களைப் பறித்துத் தின்றுவிட்டுப் பிறகு நாம் பாடசாலைக்குப்போவோம். பொழுது இன்னும் அதிகம் இருக்கிறது" என்றார்கள். மற்றவர்கள் "இப்படிச் செய்வது திருட்டுத்தொழிலாகும். இதுவேண்டாம்" என்றார்கள். இதைக் கேளாமல் முனியனும், சொக்கனும் மாத்திரம் அவர்களை நீங்கி அங்கே தங்கி, மாம்பழத்தைப் பறித்துத்தின்றுவிட்டு, அப்புறம் கல்விச்சாலைக்குச் சென்றார்கள். அன்றைக்கு அவர்களுடைய களவுத்தனத்தை ஒருவரும் அறியவில்லை.

மறுநாள் இந்த இருபிள்ளைகளும் மாமரத்தின் மேலேறிப் பழங்களைப்பறித்துத்தின்றார்கள். அப்போது திடீரென்று தோட்டக்காரன் அங்கே வந்து, அதைப்பார்த்து, இந்தப்பிள்ளைகளை நன்றாய் அடித்துத் துரத்தினான். இவர்கள் மெல்ல மெல்லப் பள்ளிக்கூடத்துக்கு வந்தபோது குறித்த நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது.

உபாத்தியாயர் இவர்கள் நேரஞ்சென்று வந்ததை விசாரிக்கையில் இவர்களுடைய திருட்டுச்செய்கை வெளியாயிற்று. அப்போது அவர் பிள்ளைகளுக்குப் "பிறர்பொருளைத் திருடல் பெரிய கேட்டை உண்டாக்கும்" என்றும், "அது மிகவும் இழிவான தொழில்" என்றும் நற்புத்தி புகட்டி, அவர்களை நல்வழியில் நடக்கும்படி கற்பித்தார்.

பாட்டு.

"அம்பலத் தரசே" என்ற மெட்டு.

1. பாலர்கள் சிலபேர் சேர்ந்தொருநாள்
பள்ளிக் கூடம் போம்போது
மாந்தோப் பொன்றில் பழம்பழுத்து
வழியின் அருகே தனித்திருக்க,

2. பார்த்து முனியன் சொக்கனெனும்
பையன்கள் மற்றவர் களைநோக்கி
"இந்தப் பழங்களை நாம்பறித்து
எல்லோரும் இன்பமாய்த் தின்றுவிட்டு,

4. போவோம் பாடசாலைக்கு
பொழுதும் அதிகம் இருக்கிறதே"
என்று சொல்லக் கேட்டவர்கள்
"இது திருட்டாகும் வேண்டா" மென்று

5. எடுத்துச் சொல்லவுங்கேட் காமல்
இருவரும் மரத்தின் அருகேபோய்ப்
பழத்தைப் பறித்துத் தின்றார்கள்;
பார்க்க வில்லையதை ஒருவருமே.

6. மறுநாள் அவர்கள் மரமேறி
மாம்பழம் பலவற் றைப்பறித்துத்
தின்றுகொண் டிருக்கும் ஸமயத்தில்
திடீ ரென்று தோட்டக் காரன்.

7. அங்குவந் தவர்களை ஐயோ! பாவம்!
அழும்படி அடித்துத் துரத்திவிட்டான்
பையன்கள் தயங்கி மெல்லமெல்லப்
பள்ளிக் கூடம் சேர, அவர்,

8. சங்கதி கேட்டஉபாத்தி யாயர்
சற்புத்தி கூறினார்! அவர்களுக்கு
இந்தக் கதையால் சிறுவர்கள்நாம்
என்றும் திருடல் கெடுதி என்றும்,

9. பலநாள் திருடன் ஒருநாளகப்
படுவா னென்றும் உணர்ந்து கொண்டு
சிறுதுரும் பெனினும் பிறர்பொருளைச்
சிந்திக்காமல் நன்றாய் வாழ்வோமே.

கவனமில்லாத பையன்.

ஒரு பாடசாலையில் உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் பிரியமாகப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தார். எல்லாப் பிள்ளைகளும் கவனமாய்ப் பாடத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு சோம்பேறிப் பையன் மாத்திரம் பாடத்தைக் கவனியாது சுவரிலுள்ள ஒரு சிறிய வளையை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

குரு இவனைப்பார்த்து, "பையா! நான் சொன்னதெல்லாம் மனதில் நுழைந்ததா?" என்றார். அப்போது பையன் திடுக்கிட்டு எழுந்திருந்து, தன்னை என்ன கேட்டார், என்பதுகூடத் தெரியாமல் திகைத்து விழித்தான். ஆசிரியர் "என்ன அப்பா! எல்லாம் நுழைந்ததா?" என்று திரும்பவுங்கேட்டனர். பையன், "இல்லை, ஐயா! அந்த வளைக்குள் எலியின் உடல்மாத்திரம் நுழைந்திருக்கிறது. வால் இன்னும் நுழையவில்லை" என்றான். பிள்ளைகளெல்லாம் 'மட மட' என்று சிரித்து, அவனைப் பார்த்துப் பரிகாஸம் செய்தார்கள்.

பிள்ளைகள் உபாத்தியாயர்கள் போதிக்கும் போது விஷயங்களை நன்றாய்க் கவனிக்கவேண்டும். மற்றவற்றை நினைத்துக்கொண்டிருக்கக் கூடாது.

பாட்டு.

"சந்தைக்கடையிலோருவன்வடை" என்ற மெட்டு.

1. பள்ளிக்கூட மொன்றிலே உபாத்தியாயர் தம்
பிள்ளைகட்குப் பாடஞ்சொன்னார் பிரியமாகவே.

2. சொன்ன பாடம் கவனியாதோர் சோம்பேறிப் பையன்
என்னவோ பராக்குப் பார்த்தான் இமைகொட்டாமலே

3. அவனைநோக்கிக் குருவும் அப்போ "தப்பா இப்பாடம்
கவனித்தையாசொன்னதெலாம் கருத்தில் நுழைந்ததா!"

4. என்றுகேட்கச் சிறுவன்பயந் தெழுந்திடத்தினில்
நின்றுவிழிக்கஅவர் "முழுதும் நோய் நுழைந்ததா!"

5. என்றே அவனை மறுமுறையும் இனிது கேட்டனும்
நின்ற அவனும்"ஐயா! சுவரில் நீண்ட வளைக்குள்ளே

6. முழுதுடம்பு நுழைந்ததையா; முன்னேவாலொன்றே
நுழைய வில்லை இவ்வெலிக்கு; நோக்குவீர்நீரே"

7. என்றதைக் கேட்டோர் அவனை ஏளனம்செய்தார்;
என்றும் கவனக்குறைவென்பதே எவர்க்கு மாகாதே.



ஆமையும், முயலும்.

காட்டில் வசித்துவந்த ஒரு முயல் மற்ற பிராணிகளைப் பார்க்கிலும் தான் வேகமாக ஓடும் பிராணி என்று தன்னைப் பற்றி அதிகப் பெருமையாய் எண்ணிக்கொண்டிருந்தது.

4B

ஒரு ஸமயத்தில் அது அருகேவந்த ஒரு ஆமையைப் பார்த்து "நீ வெகு மந்த நடையுள்ளவன்" என்று பரிகாசம் செய்தது. ஆமை அதற்கு முயலைப் பார்த்து "வீண் வாய்ப்பேச்சால் என்ன பயன்? பந்தயம் போட்டுக்கொண்டு, நாம் ஓடிப்பார்க்கலாம், வா" என்றது. அப்படியே இரண்டும் முன்னே தூரத்திலுள்ள ஒரு இடத்தைக் குறிப்பாக வைத்துக்கொண்டு ஓடத் தொடங்கின.

முயல் மிக வேகமாய்க் கொஞ்சதூரம் ஓடிப் பிறகு சற்றே களைப்படையவே ஆமையைத் திரும்பிப் பார்த்தது. ஆமை பின்னால் வெகுதூரத்தில் நகர்ந்து வருவதைக் கண்டு, "இந்த ஆமையா நம்மைப் பிடிக்கப் போகிறது! நாம் இங்கே படுத்துக் கொஞ்சம் இளைப்பாறிக்கொண்டு, பிறகு ஓடிவிடலாம்" என்று எண்ணி, அங்கே ஒரு மரத்தருகு சென்று படுத்து நன்றாய்த் தூங்கிவிட்டது.

இது இப்படித் தூங்குகையில் ஆமை கொஞ்சங் கொஞ்சமாய் நகர்ந்து, குறித்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. முயல் விழித்துக்கொண்டு பார்த்து மிகுந்த வெட்கமடைந்தது. ஆமை முயற்சியினால் பந்தயத்தைக் கெலித்தது. முயலோ கர்வங்கொண்டிருந்தபடியால் தோற்றுப்போய் அவமானமடைந்தது.

பாட்டு.

நொண்டிச்சிந்து.

ஒருநா ளொருமுயலும்—தான்
ஒடுவதைப்பற்றிக் கர்வங்கொண்டோர்

ஆமையைப் பார்த்து, ''நீ—மிகவும்
குறுகிய காலையுடைய'' னென்று,
குறும்பா கப்பேச—ஆமையும்
''பார்ப்போம் ஒருகைவாய்ப் பேச்செதற்கு?
பந்தயம் நாம்போடுவோம்''—என்றுசொல்ல
முயலும் அதற்கு உடன்படவே,
முன்னோர் இடம்குறித்து—இரண்டும்
முடுக்காய் ஆரம் பித்தனவே.
முயலும் வெகுவிரைவாய் —முன்னே
ஓடிநெடுந்தூரம் போய்க்கால்கள்
ஓய்ந்துதி ரும்பிப்பார்க்க—ஆமையும்
வெகுதூரத் தில்மெள்ள நகரக்கண்டு
மிகுந்த கர்வங்கொண்டு—தூங்கவே
ஆமையும், கொஞ்சங்கொஞ்சமாய் நகர்ந்து
அதிக முயற்சியினுல்—முதலில்
அந்த இடத்தைத்தொட்டுப் பந்தயத்தை
அதுவே வென்றதினுல்—பாலர்நாம்
'பதருத காரியம் சிதரு'தென்னும்
பழமொழி படித்துக்கொள்வோம்—மேலும்
'முயற்சியுடையார் இகழ்சிஅடையா' ரென்னும்
முன்னோர்வாக் குண்மையுணர்வோம்—அன்றியும்
கொஞ்சங்கூட யார்க்குங்கர்வம் கூடாதென்றும்
குறித்துக்கொள்வோம் மனத்தில்

நன்றியில்லாத மான்.

ஒரு காட்டில் ஒரு மான் சந்தோஷமாகக் காலங் கழித்து வந்தது. அதை ஒருநாள் சிலவேடர்கள் வேட்டையாடினார்கள். அது அப்போது மிகவும் பயந்து, விரைவாக ஓடிச்செல்லுகையில், எதிரில் அடர்ந்தமுல்லைக்கொடிகளின் புதர் ஒன்றைக்கண்டது. கண்டவுடன் மான் அந்தப் புதரைப் பார்த்து, ஏ முல்லைப்புதரே! உனக்குப் பின் பக்கத்தில் நான் மறைந்திருக்கச் சற்றே தயை செய்து இடங்கொடு; இல்லாவிட்டால் என் உயிர் போய்விடும்'' என்று கெஞ்சிக் கேட்டது.

முல்லையும் அதற்குச் சம்மதித்தது. அதனால் வேடர்கள் அம்மானைத் தேடிக் காணமுடியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து மானும் தனக்கு உபகாரம் செய்த முல்லைப் புதர்க்கு வந்தனம் செலுத்துவதற்குப் பதிலாக, அந்தக் கொடிகளையும், இலைகளையும் 'படக் படக்' கென்று பல்லால் கடித்தது. இப்படிக் கடிக்கும் சத்தம் சற்றுத் தூரத்தில் இருந்த வேடர்கள் காதிற்பட்டது. உடனே அவ்வேடர்கள் அம்மானைத் தாக்கியடித்துக் கொன்றுவிட்டனர். உபகாரம் செய்தவர்க்கு அபகாரம் செய்தால் அதனால் மிகுந்த தீங்கு உண்டாகும்.

பாட்டு.

'கங்காதரனும்' என்ற இந்துஸ்தான் மெட்டு.

1. காட்டி லொருமான் கவலை இல்லாமல்
காலம் கழிக்கையில்
வேட்டையாடினர் வேடர்கள் அதை
வெருண்டப்போ தது,

2. முடுக்காக ஓடியோர் முல்லைப் புதரை
முன்னே கண்டதும்,
விடுக்காமல் தன்னை மறைத்துக் காப்பாற்ற
வேண்டிக் கொண்டதே.

3. இஷ்டப்பட்டந்த முல்லைப்புதரும்
இருக்க இடந்தர,
கஷ்டப் பட்டந்த வேடருந்தேடிக்
காணாது போயினர்.

4. முல்லைச் செடிக்கு வந்தனம் செய்ய
முன்வராமல் மான்
பல்லைக் கொண்டந்த முல்லைக் கொடியைப்
பற்றிக் கடித்ததே.

5. சத்தத்தைக் கேட்டுச் சட்டென் றம்மானைத்
தாக்கினர் வேடர்
சத்தியம் நன்றி இல்லாதவரைச்
சாரும் தீமையே.

எஜமானனை ஏய்க்கப் பார்த்து ஏமாந்த கழுதை.

ஒரு வியாபாரி தன் கழுதையின்மேல் உப்புப்பாரம் போட்டு, ஊர்ச்சந்தைக்குப் போனான். வழியில் ஒரு ஓடையை வியாபாரி முன்னும் கழுதை பின்னுமாகக் கடந்து செல்லுகையில் உப்புப்பொதி தண்ணீரில் நனைந்து கரைய ஆரம்பித்தது. அது கண்டு கழுதை ஆனந்தங் கொண்டு, ஆழமான இடத்தில் மெதுவாக நடந்து சென்றது. செல்லவும் உப்பெல்லாம் கரைந்துவிட்டது. கழுதை

செய்த மோசத்தைக்கண்ட எஜமானன் மறுநாள் அதன் மேல் பஞ்சுப்பாரம் ஏற்றி அந்த ஓடைவழியே நடத்தினன். கழுதையும் முன்போல் பளுக் குறையுமென்று ஆழமான இடத்தில் நடந்து சென்றது. ஆனல் தண்ணீர் பஞ்சில் ஏற ஏறப் பாரம் மிகவும் ஏறிற்று. கழுதை கரையேறி நடக்கமுடியாமல் தவித்தது. அப்போது வியாபாரி வஞ் சகக் கழுதையே! நேற்று உப்பைக் கரைக்கும்போது எப் படியிருந்தது! உனக்கு இத்தண்டனை வேண்டும் வேண் டும்'' என்று தடியால் புடைக்கக் கழுதையும் அவ்வடி பொறுக்காமல் தள்ளாடித் தள்ளாடித் தளர்ந்து சென்றது.

பாட்டு.

நோண்டிச் சிந்து.

ஒருநாள் ஒருகழுதை—தன்னை
ஓட்டிவந்த எஜ மானுடனே
உப்புச் சுமை சுமந்து—தண்ணீர்
ஓடுகின்ற ஒரு ஓடை தனையே
கடந்து செல்லும்போது—உப்பு
கரைவதைக் கண்டு களிப்படைந்து
ஆழமுள்ள இடத்தில்—இறங்க
அவ்வளவு உப்பும் கரைந்து போக
சந்தோஷமாய் அக்கரை—கழுதை
சாரவும் எஜமான் இதை அறிந்து
பஞ்சு மூட்டையை மறுநாள்—அதன்மேல்
பரப்பி ஓட்ட அவ் வோடை கண்டே
வெள்ளி மூக்குக் குதிரை—வெகு
விரைவாய்த் தண்ணீரில் இறங்கிடவும்

தண்ணீர் பஞ்சில் ஏறி—கழுதை
தாங்க முடியாமல் கனமாக்க,
கழுதையும் நடக்கப் பலம்—இன்றிக்
கஷ்டப் படுகையில் எஜமானனும்,
"கள்ளத் தடிக் கழுதாய்!—உப்பைக்
கரைத்தபோ தெப்படி இருந்த" தென
நையப் புடைத்திடவே—கழுதை
பையத்தள் ளாடி நடந்ததுவே.
எஜமானத் துரோகம்—என்றும்
ஏற்காதென்று நாம் தெரிந்து கொள்வோம்.

தகப்பனும், உண்மையுள்ள பையனும்.

ஒரு ஊரில் ஒரு கனவான் நல்ல புஷ்பச் செடிகளைத் தன் தோட்டத்தில் வைத்து வளர்த்து, அவற்றை அடிக்கடி பார்த்துச் சந்தோஷப் படுவார். ஒருநாள் அவர் தோட்டம் பார்க்கப் போனபோது அங்கு அவருக்குப் பிரியமான ஒரு இளம் பூச்செடி கத்தியால் சின்னபின்னமாக வெட்டுப்பட்டு வாடிக்கிடந்ததைக் கண்டார். கண்டு வெகு வருத்தமும் கோபமும் கொண்டார். உடனே தோட்டக் காரனைக் கூப்பிட்டு 'யார் இது செய்தது?' என்று கண்டித்துக் கேட்டார். தோட்டக்காரன் நான் ஒன்றும் அறியேன்" என்று சொன்னான்.

அச்சமயத்தில் அக்கனவானுடைய செல்வக்குமாரனை சிறுவன் கையில் அழகிய கத்தியுடன் அங்கு விளையாட வந்தான். அவன் தன் தந்தையிருக்கும் நிலைமை

யைக்கண்டு, "அப்பா! தோட்டக்காரனைக் கோபிக்கவேண்டாம்; நான்தான் சற்று நேரத்துக்குமுன் இந்தக் கத்தி கிடைத்த சந்தோஷத்தால் பூச்செடியைவெட்டிவிட்டேன். தங்களுடைய இஷ்டமான புஷ்பச்செடியைப் பாழாக்கின தற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். என்னை மன்னித்துக் காப்பாற்றவேண்டும். இனி இப்படிச் செய்யமாட்டேன்" என்று வேண்டினான்.

தகப்பன் இது கேட்டு, பூச்செடி போனதை முழுதும் மறந்து, தன் மகன் மெய்பேசியதற்கும், மன்னிப்புக்கேட்டதற்கும் மெச்சிக்கொண்டு, அவனை அன்போடு கட்டி அணைத்துக்கொண்டான். எவ்வித சமயத்திலும் உண்மையே பேசவேண்டும்; அப்படிப்பேசுவதுதான் பெருமை.

பாட்டு.

'பித்தா பிறை சூடி' என்ற மெட்டு.

தகப்பன்:—வாடா! தோட்டக்காரா—இந்த
வண்ணமலர்ச்செடியை
ஏடா! சின்ன பின்னமாக
இந்தவண்ணம்! சிதைத்தாய்?

தோட்டக்காரன்:—ஐயா! எஜமானே!—இதை
அடியேன் சிதைப்பேனோ;
ஐயோ! இது செய்தவரை
அறிந்தால் விடுவேனோ

(அச்சமயம் மகன் அங்கே வந்து)

'சின்னச் சின்ன எறும்பே' என்ற மெட்டு.

மகன்:—என்ன ருமைத் தந்தையே!
யானும் விளை யாட்டினுல்
என்பு திய கத்தியால்
இதைந றுக்கிப் போட்டேனே.
மிகவும் அரிய பூஞ்செடி
மேவி அழித்த பிழையினை
மகிமை மிக்க ஐயனே!
மன்னித் தருள வேண்டுமே.

அகவல்.

தகப்பன்:—சிந்தை மகிழ்ந்தேன் செல்வக் குழந்தாய்!
இந்த விதத்தில் எடுத்துநீ உண்மையைக்
கோபித்த என்முன் கூசாம லுரைத்த
மாபத்தி கண்டு மனமிக மகிழ்ந்தேன்.
இதுபோல் பூச்செடி எல்லாம் போயினும்
இதமா உண்மைநீ இயம்பு வதுதான்
மிகவும் சிறந்தது மெச்சி
அகமகிழ்ந் துன்னை அணைத்திடு வேனே.

அற்பசகவாசம் பிராணசங்கடம்.

ஒரு செட்டி, வியாபாரம் செய்வதற்குக் கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டு வெளியூருக்குச் சென்ருன். வழியில் ஒரு ஆண்டியை அவன் துணைக்கு அழைத்துக் கொண்டு போனுன். அவ்வாறு போகும்பொழுது அவன் ஒரு

காட்டுவழியைக் கடக்க நேரிட்டது. நடுக்காட்டை அடைந்ததும் பொழுது சாய்ந்து இருள்மூடிற்று. அப்பொழுது செடிகளின் மறைவில் ஒருவருக்கும் தெரியாமல் தன் பணத்தையும் வைத்துக்கொண்டு, தன்னையும் செடிகொடிகளால் மூடிக்கொண்டு, செட்டி படுத்துக்கொண்டான். ஆண்டியோ பணப்பயமொன்றுமில்லாமல் ஒரு ஆலமரத்தடியில் கிடந்தான்.

அப்பொழுது கள்வர்கள் ஆண்டி படுத்திருந்த ஆலமரத்தடியில்வந்து கூடினார்கள். அவர்களில் ஒருவன் ஆங்கு படுத்திருந்த ஆண்டியைப் பார்த்துப் புரட்டியும், அசையாதிருப்பதைக் கண்டான். அப்பொழுது அவன் மற்றவர்களைப் பார்த்து, 'இதென்ன? மரமா கல்லா?' என்றான். ஆண்டிக்கோ மிகுந்த கோபம் வந்துவிட்டது. அவன் கள்வர்களைப் பார்த்து, 'உங்கள் வீட்டு மரமும் கல்லும் இடுப்பில் முக்கால் துட்டை முடிந்து கொண்டோ படுத்துக்கிடக்கும்?' என்றான். உடனே ஒருவன் அவன் இடுப்பிலிருந்த முடியை அவிழ்த்து துட்டை எடுத்துக்கொண்டான். பின்பு அவன் மற்றொரு கள்வனைப் பார்த்து, 'அண்ணே! இந்தத் துட்டு செல்லுமா? என்று கேட்டுச் சிரித்தான். அவன் சிரித்தது ஆண்டிக்குக் கோபத்தை உண்டாக்கியது. அவன் உடனே எழுந்து நின்று திருடனைப் பார்த்து, 'என்ஐயா, சிரிக்கின்றாய்? என்னுடைய துட்டுச் செல்லுமோ, செல்லாதோ வென்பதை அதோ படுத்திருக்கிற பணக்காரச் செட்டியாரைக் கேள்' என்றான்.

பிறகு கள்வர்கள் செட்டியாரைக் கண்டுபிடித்து, அவனிடமிருந்த பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டுபோயினர். ஆண்டி செட்டியாரைப்பார்த்து 'மடியிற்கனம் வழியிற் பயம்' என்றான். செட்டியார் ஆண்டியைப் பார்த்து 'அற்ப சகவாசம் பிராணசங்கடம்' என்றார்.

பாட்டு.

ஒரு கள்வன் மற்றக் கள்வர்களைப் பார்த்து:—

'போரிவாணக்கல்யாணம்' என்ற மெட்டு.

1. என்ன இது ஆச்சரியம்
எடுத்துச்சொல்லுவீர் எனக்கு (என்ன)

2. கல்லாமரமா இது
கண்டுசொல்லுவீர் எல்லோரும் (கல்)

ஷை மெட்டு.

ஆண்டி:—

1. கல்லுமரமு மில்லை
கண்டுகொள்ளுங்கள் எல்லோரும் (கல்)

2, முக்கால்துட்டை இடுப்பில்
முடிந்துகொள்ளுமோ மரமும் (முக்)

துட்டெடுத்த கள்வன் மற்றவர்களைப் பார்த்து:—

'குள்ளத்தாராப் பாட்டு மெட்டு'

செல்லுமாசொல்லுவீரே இந்தத்துட்டு
தேசல்அதிகமான இந்தத்துட்டு

ஷை மெட்டு.

ஆண்டி:—செல்லும்செல்லாதுவென்ற சந்தேகத்தைச்
செட்டியாரைக்கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஆண்டி செட்டியாரைப் பார்த்து:—

'ஸ்ரீராமச்சந்திரனே' என்ற மெட்டு.

மடியிற்கனமிருந்தால், வழியிற்பயமதிகம்
மறவாமல் கற்றுக்கொள்வீர் நீர், நீர், நீர்.

ஷை மெட்டு.

சேட்டியார் ஆண்டியைப் பார்த்து:—

அற்பர்கள்சகவாசம், ஆபத்தையேவிளைக்கும்
அறிந்துகொள்வீர் இதனாலே நீர், நீர், நீர்.

துஷ்டர் தன்மை.

ஒரு காட்டில் பல குரங்குக் கூட்டங்கள் வசித்தன. அவை ஒருநாள் குளிரால் வருத்தப்பட்டு மின்னும்பூச்சிக் கூட்டத்தைப் பார்த்து நெருப்பென்று நினைத்தன. நினைத்துக் குளிர்காய்வதற்காக அதனருகே போயின.

அப்போது அங்கே ஒரு மரத்தின் மேலிருந்த ஒரு கொக்கு இதைப் பார்த்தது. பார்த்து, குரங்குகளின் அருகே வந்து, "இது மின்மினிப் பூச்சி; நெருப்பன்று, சூடிருக்காது" என்று சொல்லிற்று.

சொன்னவுடனே, அந்தக் குரங்குக் கூட்டத்தில் ஒன்றுக்குக் கோபம் பிறந்துவிட்டது. அஃது உடனே பாய்ந்து, எழுந்து அந்தப் பட்சியைப் பிடித்து, "நீ எனக்குப் புத்தி சொல்லுகிறவனா?" என்று சொல்லிக்கொண்டு அப்படியே அதைக் கல்லில் அறைந்து கொன்றது.

ஆகையால் துஷ்டர்களுக்கு உபதேசம் பண்ணலாகாது.

பாட்டு.

"சின்னச்சின்னஎறும்பே" என்ற மெட்டு.

1. காட்டில்பல குரங்குகள்
களிப்புடனே வாழ்ந்தன.
மிகவும்குளிரால் வருந்தவே
மின்னும்பூச்சிக் கூட்டத்தை

2. நெருப்புஎன்று நினைத்தபின்
நெருங்கின குளிர்காய
மரத்திலிருந்த கொக்கொன்று
மரமிருந்து கீழ்வந்து,

3. குரங்குகளின் பக்கத்தில்
கொக்குசென்று 'மின்மினி
பூச்சி, நெருப்புஅன்று' என்று
புகலவும் குரங்கொன்று,

4. பாய்ந்தெழுந்து கோபமாய்ப்
பட்சியைப் பிடித்து'நீ
புத்தி சொல்லுகிறவனு?
புடைக்கிறேன் உன்னை'என்று

5. சொல்லிஅந்தப் பட்சியைக்
கல்லில்அறைந்து கொன்றது.
துஷ்டர்க் குபதேசத்தால்
கஷ்டம் அதிகம் விளையுமே.

கதையும் பாட்டும்.

முதற் பாகம்.

முற்றிற்று.

அநுபந்தம்.

இப்புஸ்தகத்திலுள்ள கதை, பாட்டு இவற்றோடு சுலபமாய்ச் சேர்த்துக் கற்பித்தற்குரிய மற்றைப் பாடங்களைப் பற்றிய விவரம்.

பாடத்தின் பெயர்.	பொது விஷயம்.	இயற்கைப் பாடம்.	சித்திரம்.	கிண்டர் கார்டன் கைத்தொழில்.
நாயின் நல்லறிவு.	நாயின் அமைப்பும், குணமும்.	தனிப்பாடமாக இப்பாடம் நடத்தும் பள்ளிக்கூடங்களில் தாவரவர்க்கம், மிருக வர்க்கம் இவற்றில் பொது விஷயத்தில் காட்டியிருக்கும் விஷயங்களைப் பற்றி விரிவாகவும் சோதனைமூலமாக விளக்கியும் போதிக்கலாம்.	நாயின் கால், நாய்	சித்திரம்போல்
புத்தியுள்ள சிறுவன்	கடை வியாபாரம்.		அளவு படி, தராசு	நாணயம் வெட்டல்
ஓநாயும், ஆட்டுக்குட்டியும்.	ஆடு, ஓநாய்.		ஆடு ஓநாய் இவற்றின் உறுப்புகள்.	சித்திரம்போல்
நோய் கொண்ட கலைமான்.	மான்.		மான் தலையும் கொம்பும்	ஷை
நான்கு எருதுகளும் சிங்கமும்	(எருது (வீட்டு மிருகம்) சிங்கம் (காட்டு மிருகம்)		சிங்கம்; எருது இவற்றின் அவயவங்கள்.	ஷை
தாயும் இரண்டு பிள்ளைகளும்.	கண்ணாடி, பலவகைப் பந்தாட்டம்		பந்து, விளக்கு, குடம், சிம்னி.	ஷை
காக்கையும், குடமும்	காக்கை, பானை செய்யும் தொழில்		காக்கை, குடத்தின் மேல் காக்கை	ஷை
குதிரையும், நரியும்.	குதிரை, நரி, சிங்கம்.		குதிரை நரி.	குதிரை, சேணம்.
எலியும் தவளையும்.	எலி, தவளை; பருந்து.		எலி, தவளை, பருந்து	எலி, தவளை.

பொன் வாத்தும், பேராசைக்காரனும்.	வாத்து.	முட்டை, கத்தி, வாத்து.	சித்திரத்தைப்போலவே
சிங்கம் சுண்டலி	சிங்கம், எலி.	எலி வலையைக் கடித்தல்	சுண்டெலி வலைபின்னல்
சிறுவனும் பாம்பும்	பாம்பு, ஊர்வன.	பாம்பு படமெடுத்தல். பாம்பு	பாம்பு, கிண்ணம்.
இரண்டு திருட்டுப் பிள்ளைகள்.	மாமரம், பழமரங்கள்	மாவிலை, பழம், மரம்.	இலை, பழம்.
கவனமில்லாத பையன்	எலி, பாடங்கேட்கும் முறை.	புஸ்தகம், வளைக்குள் எலி	சித்திரத்தைப்போலவே
ஆமையும் முயலும்	ஆமை. முயல்.	நகரும் ஆமை, தூங்கும் முயல்	ஷை
நன்றியில்லாத மான்.	மான், முல்லைக்கொடி பூ முதலியன.	மான், அதன் பாகங்கள் முல்லைச்செடி.	ஷை
எஜமானை எய்க்கப் பார்த்த கழுதை.	கழுதை, சந்தை	கழுதையின் அவயவங்கள் பொதி ஏற்றிய கழுதை	ஷை
தகப்பனும் உண்மையுள்ள மகனும்.	பூச்செடி வளர்த்தல்	பூச்செடி, கத்தி, வெட்டுண்ட பூச்செடி.	ஷை
அற்பசகவாசம் பிராண சங்கடம்.	வியாபாரி ஆண்டி குணம்.	கள்வர்கள்.	ஷை
துஷ்டர் தன்மை	குரங்கு மின்மினிப் பூச்சிகள்	குரங்கு கொக்கைப் பிடிப்பது.	ஷை

குறிப்பு:—கதை, பாட்டு இவைகளுக்குப் பிறகு 'நெஞ்சாரப்பொய்தன்னைச் சொல்லவேண்டாம்', 'ஊக்கமதுகைவிடேல்', 'இணக்கமறிந்திணங்கு', 'நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்', கொலைகளவு செய்வாரோடிணங்கவேண்டாம்', 'பேதமையகற்று', 'நன்றிமறவேல்', 'சூதும் வாதும் வேதனை செய்யும்', செய்வனதிருந்தச்செய்'முதலியநீதிச்செய்யுள்களைத்தகுந்தஇடங்களில்விளக்கிக்காட்டலாம்.

170904

சில முக்கிய அபிப்பிராயங்கள்.

ஸ்கூல் இன்ஸ்பெக்டராயும் பிரபல வித்யா அதிகாரியாயும் நெடுங்காலம் விளங்கிய ஸ்ரீமான் ராவ் பஹதூர் ஸி. நாகோஜிராவ் அவர்கள் பி. ஏ' எப். எம். யூ:—

தங்கள் 'கதையும் பாட்டும்' சுலபமான தமிழ் நடையில் அமைந்திருக்கின்றன. சிறுபிள்ளைகள் அவற்றில் ஆசை கொள்வார்கள்.

2. திருநெல்வேலி 'ஜில்லா கல்வித்தலைவர்' ஸ்ரீமான் கே. நடேச ஐயரவர்கள் எம். ஏ. எல். டி, ஐ. இ. எஸ்:— "பாலர்களுக்கு ஸந்தோஷத்தையும் உற்சாகத்தையும் விளைப்பதில் 'கதையும் பாட்டும்' மிகச் சிறந்த கருவியாகும். இந்தப் புத்தகத்தில் பாட்டின் நடை செம்போக்காகவும் படிப்பார்க்கு உள்ளக்கிளர்ச்சி விளைக்கத்தக்கதாகவும் அமைந்துள்ளது; அன்றியும், பாட்டுக்களின் மெட்டு தமிழுலகில் அனைவராலும் அபிமானத்துடன் பாராட்டப் பெற்றுவரும் (தேவாரம் ஆதிய) துதிகவிகளின் பாங்கில் அமைந்திருப்பதால் பலர்க்கும் நன்கு தெரிந்தவை. வசன நடையும் தங்களுடைய உயர்தரத் தமிழ்ப் புலமைக்கும் வித்யானுபவத்திற்கும் ஏற்றபடி: சுலபமாகவும் சுத்தமாகவும் இயங்குகின்றது. கிண்டர் கார்டன் முறையில் புத்திசாலித்தனமாகவும் உபயோககரமாகவும் பற்பல விதமாகப் பாடம் நடத்துவதற்கு இப்புத்தகத்தை மூலாதாரமாகவும், மையஸ்தானமாகவும் அமைத்துக் கொள்ளலாம். பாலபோதனைத் துறையில் வேலை பார்ப்பவர்கள் இந்நூலில் காட்டியுள்ள சிறந்த துணைச் சாதனங்களுக்காக இந்நூலாசிரியர்க்கு நன்றி செலுத்தற் குரியராவர்."

௨௮-௮-௫௧

மதுரை புத்தகவியாபாரம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் வெளியிட்ட

தமிழ்ப் புத்தகங்கள்.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றன.

புதிய பாடப் புத்தகங்கள்:— இவை துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்து, நூதன போதனமுறைக்கிணங்க சுகாதாரம், அரசியல், பூமிசாஸ்திரம், இலக்கணம், தேகதத்துவம், பிராணி சாஸ்திரம், தாவரசாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியன வகுப்புக்குத் தக்கவாறும், மாணவர்கள் எளிதில் உணருமாறும், சிறந்த தமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ளன.

புதிய முதல் பாடம்	0—2—0
புதிய இரண்டாம் பாடம்	0—3—0
புதிய மூன்றாம் பாடம்	0--3—6
புதிய நான்காம் பாடம்	0—4—6
புதிய ஐந்தாம் பாடம்	0—6—0

நல்லொழுக்க போதவர்க்கம்; நீதிவாக்கியக் கதைகள்.

உலகநீதி	நீதிவாக்கியக்கதைகள்	0—2—0
ஆத்திசூடி	நீதிவாக்கியக்கதைகள்	0—2—0
கொன்றைவேந்தன்	நீதிவாக்கியக்கதைகள்	0—2—0
வெற்றிவேற்கை	நீதிவாக்கியக்கதைகள்	0—3—0
மூதுரை	நீதிவாக்கியக்கதைகள்	0—5—0
நல்வழி	நீதிவாக்கியக்கதைகள்	0-10—0

ஒவ்வொரு வகுப்பிற்கும் குறித்துள்ள செய்யுட்பாட வாக்கியங்களை மாணாக்கர்கள் நெட்டுருக் கொண்டு பதவுரை, கருத்துரைகளை மனனம் செய்தும், அவைகளின் கருத்துக்கள் மனதில் பதியாது நிற்கும் குறையை நீக்கும் நோக்கங்கொண்டு, கதைகளைப் படித்துத் தெளிவது, அக்கருத்தமைந்த வாக்கியங்களைக் கற்றல் கன்மேல் பதிந்த எழுத்தைப்போல் மனதில் நிலைபெறுமாறு எழுதப்பெற்றுள்ளன. நல்லொழுக்கப் போதத்திற்கும் இவை நற்றுணையாகும். கதாவாசகப் புத்தகங்களாகவும் இவற்றை வழங்கலாம். காம்போவிஷன் என்னும் பாஷா ஞானபோதத்திற்கும் இவை ஏற்றவை.